பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 07 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சவுதி அரேபியாவில் இருந்து ஆண்டுக்கு 31 லட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. உரம் இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம், மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.
- வருமான வரி தொகையை திரும்பப் பெறுவதற்கான அவகாசம் 17 நாட்களாக குறைந்துள்ளது என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.
- திருக்குறளின் சிறப்புகளை முழுமையாக எடுத்துக்கூறும் வகையில் தில்லியில் மாபெரும் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா இன்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றது.
- விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இத்தாலியின் **Jannik Sinner** சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சவுதி அரேபியாவில் இருந்து ஆண்டுக்கு 31 லட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. உரத்தை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம், மத்திய ரசாயன உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

மூன்று நாள் பயணமாக சவுதி அரேபியா சென்ற திரு. ஜெ.பி. நட்டா, ரியாத் நகரில் அந்நாட்டு தொழில்துறை மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் திரு. **Bandar Bin Ibrahim Al Khorayef**-ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது சவுதி அரேபியாவின் **Maaden** நிறுவனத்திற்கும், இந்தியாவின் ஐ.பி.எல், சி.ஐ.எல் மற்றும் **Kribhco** நிறுவனங்களுக்கு இடையே கையெழுத்தானது.

இதன்படி நடப்பாண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு டி.ஏ.பி. உரம் இந்தியாவுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டில் டி.ஏ.பி. உரம் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து திரு. ஜெ.பி. நட்டா, சவுதி அரேபியாவின் இளவரசரும், அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சருமான திரு. **Abdul Ajiz Bin Salman Al Saud**-ஐயும் சந்தித்து இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

மேலும் நாட்டின் சுகாதாரத்துறை துணை அமைச்சர் திரு. அப்துல் அஜீஸ் அல் ருமையாவையும் திரு. ஜெ.பி. நட்டா சந்தித்துப் பேசினார்.

அப்போது மருத்துவ சேவைகள், மருந்துப் பொருட்கள் மற்றும் டிஜிட்டல் சுகாதார சேவை தொடர்பான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக மத்திய ரசாயன உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆசியான் நாடுகளுடனான ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசியான் - இந்தியா வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஆசியான் அமைப்பு முக்கிய இடம்பெறுவதாக கூறினார்.

பாதுகாப்பு, பொருளாதாரம், சமூக கலாச்சார துறைகளில் ஆசியான் நாடுகளுடனான ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா முன்னுரிமை அளிப்பதாகவும் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவின் யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனை உலகின் முன்னணி பணப் பரிவர்த்தனை முறையாக உருவெடுத்துள்ளது என்று நிதி ஆயோக் அமைப்பின் முன்னாள் தலைமைச் செயல் அதிகாரி திரு. அமிதாப் காந்த் கூறியுள்ளார்.

இது பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாக திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களின் வாழ்க்கையையும் இந்தப் பரிவர்த்தனை பெருமளவு மாற்றியமைத்துள்ளதாக திரு. அமிதாப் காந்த் குறிப்பிட்டுள்ளார்.

தினம்தோறும் 650 மில்லியன் யு.பி.ஐ. பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுவதன் வாயிலாக விசா பரிவர்த்தனையை பின்னுக்குத் தள்ளி முதலிடத்திற்கு வந்துள்ளதற்கும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்தியாவின் மொத்த டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் 2023-24ஆம் நிதியாண்டில் 79 புள்ளி 7 சதவீதமாக இருந்த யு.பி.ஐ. பரிவர்த்தனை 2024-25ஆம் ஆண்டில் 83 புள்ளி 7 சதவீதமாக அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

2028-29ஆம் ஆண்டுக்குள் 20 நாடுகளுக்கு யு.பி.ஐ. பரிவர்த்தனையை விரிவுபடுத்த உறுதிபூண்டுள்ளதாகவும் அந்த வங்கி கூறியுள்ளது.

<<<<>>>>

வருமான வரி தொகையை திரும்பப் பெறுவதற்கான அவகாசம் மூன்று மாதங்களில் இருந்து 17 நாட்களாக குறைந்துள்ளது என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

இந்த வாரியத்தின் முதன்மை கணக்கு கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ள தகவலின்படி வருமான வரித்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தி டிஜிட்டல் கட்டமைப்புகளை அதிக அளவில் ஏற்படுத்தி இருப்பதே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரியை உடனுக்குடன் பரிசீலித்து சரிகட்டுவதுடன், குறைதீர்வு முறைகளை ஆன்லைன் வாயிலாக மேற்கொள்வதன் காரணமாக வரி செலுத்துவோரின் சிரமங்கள் தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2013-14ல் 11 புள்ளி 5 சதவீதமாக இருந்த திருப்பி அளிக்கப்படும் வருமான வரித்தொகை 2024-25 நிதியாண்டில் 17 புள்ளி 6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

வருமான கணக்கு தாக்கல் செய்வோர் எண்ணிக்கையும் இரட்டிப்பாகி நேரடி வரி வசூல் 27 லட்சத்து 2 ஆயிரத்து 974 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருக்குறளின் சிறப்புகளை முழுமையாக எடுத்துக்கூறும் வகையில் தலைநகர் தில்லியில் மாபெரும் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்கும்படி மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்றார்.

இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த பிறகும் திருக்குறளில் இடம்பெற்றுள்ள ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வரி இன்றும் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

திருக்குறளை படிப்பதோடு மட்டுமின்றி அதில் உள்ள கருத்துகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பது அவசியம் என்றும் முதமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

திருப்புவனம் காவல் நிலைய மரணம் உட்பட திமுக ஆட்சியில் இதுவரை நடந்த அனைத்து காவல் நிலைய மரணங்கள் குறித்தும் சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

விருதுநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசின் செயல்பாடுகள் மக்கள் வெறுப்படையும் அளவிற்கு இருப்பதாக குற்றம் சாட்டினார்.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியமைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தேர்தல் பணிகளை விரைவுபடுத்தும் வகையில் பிஜேபி சார்பில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர் ஆகிய 5 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் வெளி மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

முருகப்பெருமானின் முதலாம்படை வீடான மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா இன்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திருவள்ளூரில் சரக்கு ரயில் தடம் புரண்டு ஏற்பட்ட விபத்து காரணமாக, பாதிக்கப்பட்டிருந்த ரயில் போக்குவரத்து முழுமையாக சீரடைந்தது.

சென்னை — அரக்கோணம் மற்றும் அரக்கோணம் - சென்னை ஆகிய இரு மார்கத்திலும் ரயில்கள் குறைந்த வேகத்தில் இயக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

காஸா பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 59ஆக அதிகரித்துள்ளது. 208 பேர் காயமடைந்துள்ளனர்.

<<<<>>>>

நைஜீரிய முன்னாள் அதிபர் முகமது புகாரி லண்டனில் நேற்று காலமானார். அவருக்கு வயது 82.

<<<<>>>>

உல்ஃபா-ஐ தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 3 முக்கிய தலைவர்கள் மியான்மரில் நேற்று கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவையில் மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

மும்பையில் காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் அரசின் சேவைகளைப் பெறுவதற்கான சிறப்பு முகாம் 209 இடங்களில் நடைபெற உள்ளதாக ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணிக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி சந்திரகலா கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே காட்டு யானை தாக்கியதில் வேட்டைத் தடுப்புக் காவலர் படுகாயமடைந்தார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் பகுதியில் சமையல் எரிவாயு கசிந்து தீப்பற்றியதில் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை ஆட்டக்காரரான இத்தாலியின் **Jannik Sinner** சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவர், நடப்புச் சாம்பியனான கார்லோஸ் அல்காரசை 4-6, 6-4, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

இதன் மூலம் 148 ஆண்டுகால விம்பிள்டன் வரலாற்றில் முதல் முறையாக பட்டம் வென்ற இத்தாலி நாட்டவர் என்ற சிறப்பை பெற்றார்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் நேற்றைய 4ஆம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 58 ரன் எடுத்துள்ளது.

இப்போட்டியில் இந்தியா வெற்றி பெற இன்னும் 135 ரன் தேவை.

<<<<>>>>